# "மா"விற்கு ஊட்டச்சத்து நிர்வாகம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் முக்கிய தோட்டக்கலைப் பயிரான மா வின் மகசூல் சென்ற 10 வருடங்களாக குறைந்து கொண்டே வருகிறது. இதற்கு முக்கிய காரணங்களாக சீரற்ற ஊட்டச்சத்து மற்றும் நீர் நிர்வாகம் பூச்சி மற்றும் நோய் தாக்குதல், முறையான பராமரிப்பு இல்லாமை ஆகியவற்றை கூறலாம். பொதுவாக நம் விவசாயிகள் மாமரங்களுக்கு தேவையான அளவு ஊட்டச்சத்துக்களை கொடுப்பதே இல்லை ஒவ்வொரு மாமரமும் மண்ணிலுள்ள ஊட்டச்சத்துக்களை கிரகித்து கொண்டுதான் மகசூல் தருகிறது. இதனால் வருடாவருடம் மண்ணிலிருந்து தொடர்ச்சியாக சத்துக்கள் நீக்கப்பட்டு கொண்டே வருகிறது. இச்சத்துக்களை ஏதாவது ஒரு வகையில் மீண்டும் மண்ணிற்கு திரும்ப அளிப்பதால் தான் மண்வளம் பாதுகாக்கப்பட்டு நிலைத்த தொடர்ச்சியான மகசூலை ஒவ்வொரு ஆண்டம் பெற முடியும் இதற்கு முறையான ஊட்டச்சத்து மேலாண்மை மிக அவசியம் ஒருங்கிணைந்த முறையில் போதுமான அளவிற்கு இயற்கை மற்றும் உயிர் உரங்களையும், தேவைப்படும் அளவிற்கு மட்டும் செயற்கை உரங்களையும் இடுவதன் மூலம் மாவில் அதிக மகசூல் நிச்சயமாக பெறலாம்.

இரண்டாக பிரித்து ஜீலை மற்றும் செப்டம்பர் – அக்டோபர் மாதங்களில் மரத்தின் அடிப்பாகத்திலிருந்து 1½ லிருந்து 3 அடி வரை தள்ளி மரத்தின் ஓரம் வரை இட்டு நன்கு கலந்துவிட வேண்டும்.

## முதன்மை சத்துக்களுக்கு :

| இடு பொருட்கள் | ஒரு வருட மரத்திற்கு | ஒவ்வொரு வருடத்திற்கும் | 6-வது வருடம் முதல் |
|---|---|---|---|
| மக்கிய தொழு உரம் | 10 கிலோ கிராம் | 10 கிலோ கிராம் | 50 கிலோ கிராம் |
| தழைச்சத்து | 200 கிராம் | 200 கிராம் | 1 கிலோ கிராம் |
| மணிச்சத்து | 200 கிராம் | 200 கிராம் | 1 கிலோ கிராம் |
| சாம்பல் சத்து | 300 கிராம | 300 கிராம் | 1.5 கிலோ கிராம் |

## நுண்ணூட்டச் சத்துக்களுக்கு

மாவில் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளில் மிக முக்கியமாக போரான் மற்றும் துத்தநாகச் சத்துகுறைபாடுகள் பரவலாக காணப்படுகின்றன இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் உருவாக்கிய மேங்கோ ஸ்பெஷல் என்ற நுண்ணூட்டச்சத்து கலவையை இலை வழியாக ஊட்டமாக தெளிப்பதன் மூலம் மாவின் தரம் மற்றும் மகசூல் அதிகரிக்கும். இந்த நுண்ணூட்டக் கலவையில் 6 வகையான நுண்ணூட்டங்களும் [துத்தநாகம், இரும்பு, போரான், மங்கனீசு, தாமிரம் மற்றும் மாலிப்டினம்] 3 வகையான இரண்டாம் நிலைச் சத்துக்களும் [கால்சியம், மக்னீசியம் மற்றும் சர்ஃபர்] அடங்கியுள்ளது.

ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் நுண்ணூட்டக்கலவை என்ற வீதத்தில் தரமான ஒட்டும் பசையுடன் கலந்து இலைகள் நன்கு நனையும்படி காலை அல்லது மாலை வேலையில் மா பூக்கும் முன் 2 முறையும், காய்கள் பிடிக்க ஆரம்பித்தவுடன் 2 முறையும் கீழ்கண்டவாறு தெளிக்க வேண்டும்.

### முதல் தெளிப்பு :

ஜுன் – ஜீலை மாதம் [உரம் வைக்கும் காலத்தில்]

### இரண்டாம் தெளிப்பு :

அக்டோபர் – நவம்பர் மாதம் [பூ பிடிக்கும் முன்]

### மூன்றாம் தெளிப்பு :

பிப்ரவரி – மார்ச் மாதம் [காய்கள் பட்டாணி அளவு வந்த பிறகு]

### நான்காம் தெளிப்பு :

அறுவடைக்கும் ஒரு மாதத்திற்கு முன்.

மேற்கண்டவாறு ஊட்டச்சத்துக்களை அளிக்கும் போது மாவில் சுமார் 20 முதல் 25 சதவீதம் வரை அதிக மகசூல் பெற முடியும்

தற்போது மேங்கா ஸ்பெறுல் வேளாண்மை அறிவியல் மையத்திலும் குறைந்த விலையில் கிடைக்கிறது.


---------------- தொகுப்பு : ----------------

திரு. **K. குணசேகர்,** M.Sc., (Agri)
தொழில்நுட்ப வல்லுநர் (மண்ணியல்)

முனைவர். **T. சுந்தர்ராஜ்,** M.Sc.,(Agri), Ph.D.,
முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்
ICAR - வேளாண்மை அறிவியல் மையம்,
எலுமிச்சங்கிரி, கிருஷ்ணகிரி - 635 120.



ஸ்ரீ குமரன் ஆப்செட், பைரப்பா தெரு, கிருஷ்ணகிரி. செல் : 92453 63048